செ.இ.எண்: 121 நாள்: 29.3.12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 29.3.2012

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், அல்லிமாயர் கிராமம், மூலை மைதானம் என்னுமிடத்தைச் சேர்ந்த திரு. காடன் என்பவரின் மகன் சுப்ரமணி **29.3.2012** அன்று புதுக்காடு என்ற இடத்திற்கு விறகு எடுக்க சென்ற போது, காட்டு யானையால் தாக்கப்பட்டு, சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த சுப்ரமணி அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான சுப்ரமணியை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9